# தென்னங்கீற்று

வெளியீடு: வேலணைத் துறையூர் கலை இலக்கிய வட்டம்

தை 15 2018




பிரசுர அன்பளிப்பு:

SHATHYA PRINTERS

Printing Express

:021 561 8619, 077 13 86 661
:shathya.print@gmail.com
:Shathya Printers

# 384, Manipay Road, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## வேலணை துறையூர் பூரணை புஸ்கலை சமேத ஹரிகர புத்திர ஐயனார் ஆலய பிரதம குரு சி.மாதவராஜசர்மா அவர்களது ஆசிச் செய்தி

வேலணைத் துறையூர் கலை இலக்கிய வட்டத்தின் கலைஞர்கள் ஒன்று சேர்ந்து உருவாக்கப்பட்ட "தென்னங்கீற்று" சஞ்சிகை தொகுப்பிற்கு ஆசிகள் வழங்குவதில் பெருமகிழ் வடைகின்றேன்.

வேலணைத் துறையூர் கலை இலக்கிய வட்டத்தினர் நடாத்தும் தைப்பொங்கல் விழாவினையொட்டி வெளிவரும் இந்தத் "தென்னங்கீற்று" பல்துறைப்பட்ட ஆக்கங்களை தாங்கி வருவதோடு நல்நோக்குடனும், நல்வழியிலும் மக்களுக்கு பாரம்பரிய பண்புகளையும், வளரும் இளம் சமுதாயத்தினருக்கு நல்லறிவூட்டும் வகையில் அமையும் என நினைக்கிறேன் .

இவ்வாறான கலைப்படைப்புக்களோடு கூடிய வெளியீடுகள் நடைபெறுவது பாராட்ட வேண்டிய ஒன்றாகும். வருடத்தின் முதலாவது நூல் வெளியீட்டினை மேற்கொள்ளும் இவ் இலக்கிய வட்ட கலைஞர் குழும அனைத்து அங்கத்தவர்களையும் பாராட்டி மகிழ்கின்றேன்.

"தென்னாங்கீற்று" என்னும் இவ் சஞ்சிகைத் தொகுப்பானது பல்துறைகளிலும் கொண்ட ஆற்றல்களை நிரூபிப்பதாய் அமைகின்றது.

தொடர்ந்தும் இவ்வாறான கலைப்படைப்புக்களை சமூகத்திற்கு தரவேண்டும் என்று வாழ்த்தி ஹரிஹர சுதன் ஐயப்பனுடைய அருளும் சிவசுப்பிரமணிய சுவாமியின் அருளும் கிடைக்க வேண்டி எனது நல்லாசிகளை வழங்குகின்றேன்.

நன்றி.

பூரணை புஸ்கலை சமேத
ஹரிகர புத்திர ஐயனார் ஆலய பிரதம குரு
சி.மாதவராஜசர்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலணைத்துறையூர்
# கலை இலக்கிய வட்ட கீதம்

சீராரும் கடலணையு ம் வேலணைத்துறையூரில்
விளங்கு கலை இலக்கியவட்டம் வாழ்க
பேர் பெறுக பெருமைபல பெற்று இந்த
புவியுள்ள நாளளவும் நிலைத்து நீள்க

கார் பொழியும் மேகம் என கவிதை சொல்வோர்
நல் இசை வாணர் நாடகத்தார் சேர்ந்தார் இங்கே
தேராக இதை இழுப்போம் நாங்கள்
சேர்ந்து புது உலகம் செய்வோம்

இன் மொழியாம் தமிழ் மொழியின் பெருமை போற்றி
இலக்கியங்கள் இன்னும் பல எழுதிசேர்ப்போம்
மின்தமிழை கணனியிலே ஏற்றி உலகின்
கரைகளில் உலவச்செய்வோம்

தொன்மை மிகு பண்பாட்டின் நிலைகள் நாடி
எம்சமூக பெருமைகளை எழுதிச்சேர்ப்போம் இனி
துன்பம் இல்லை சோர்வு இல்லை இணைந்தோம்
கலை வட்த்தில்உலகை வெல்வோம்

காற்றில் வரும் சொற்கள் எல்லாம்
நல்ல தமிழ் பாட்டேயாகும்
ஆற்றில் வரும் நீர் போல பெருகாதோ
அறிவின் வெள்ளம் எல்லோருக்கும்

போற்றிடுவார் எம் செயலை
எங்கும் புகழே தங்கும்
தோற்றினோம் கலை வட்டம் இனியென்ன
கலை களரி காண்போம்

நல்லிசையில் நாம் வளர வேண்டும்
நாடகத்தை முன்போல செய்யவேண்டும்
தொல் கலையாம் சிற்பம் வண்ண ஓவியங்கள்
வரை கலைஞர்தமை வளர்க்க வேண்டும்

கல்விச் சாலையிலும் கவின் கலைகள்
ஏற்றம் காண களம் செய்வோம்
வல்லவர்கள் துணையோடு இளைஞர் சேர்ந்து
வன்மை மிகுவட்டம் என இதை செய்வோம்

பொங்கு தமிழ் எனவே புகழ் பெறுக வட்டம்
எங்கும் தமிழ் விளக்கேற்றி ஒளிர்ந்திடுக
தங்கும் பெருமையெலாம் தாயகத்தை சேர்கவென
சங்கம் ஒலித்து தழைத்திடுக தமிழ் வட்டம்

-வேலணையூர்தாஸ்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் திருநாள்

தைத்திருநாள் - இது
தனிப்பெரும் தமிழர் திருநாள்..!
உறவுகள் கூடிப் போற்றும்
உன்னதத் திருநாள்..!

நன்றி மறவாது,
நன்னெறி தவறாது,
நன்றிக்கடன் தீர்க்கின்ற
நல்லதொரு திருநாள்..!!

அழகுத்தமிழ் திருநாள்..!
அன்புத்தமிழர் பெரும் நாள்..!
அயலவர் இணையும் நன்னாள்..!
அகங்காரம் அழியும் மேன்மைத்திருநாள்..!
அகத்தில் ஒளி தோன்றும் ஓங்காரநாள்..!
வாழ்க்கைக்கு வழி பிறக்கும் சிறப்பானநாள்..!

ஒளியூட்டும் கதிரவனுக்கும்,
படைத்தருளும் இறைவனுக்கும்
இளையவரும் பெரியவரும் சேர்ந்து...
இன்பம் பொங்க வாழ்த்தும் நன்னாள்..!

உறவுகள் கூடி அயலவர் சேர்ந்து
ஆடிப்பாடி அன்பு பரிமாறும் நன்னாள்..!
பன்னிரு மாதங்கள் காத்திருந்து
எதிர்பார்த்திருந்து மகிழ்ச்சி பூக்கும் ஒருநாள்..

மனதாலே நன்றி கூறி,
பாதங்கள் தொழுது வணங்கி,
பெரியவரையும் பெற்றோரையும்
மதித்துப் போற்றும் மங்கள நன்னாள்..!

மழலையுடன் சிறுவர்களும்,
பெரியவரும் மகிழ்ந்து சேர்ந்து,
வெடி கொளுத்தி களிப்படைந்து
கவலை மறக்கும் அற்புதத் திருநாள்..!

சுத்தம் செய்த முற்றத்திலே
மஞ்சலிட்டு நீர் தெளித்து,
சாணகத்தால் மெழுகி - அதில்
கோலம் போட்டு அழகு சேர்த்து...

கட்டி வைத்த வாழை மரம்,
காற்றிலாடும் மாவிலையும்,
தோரணமும் தொங்கவிட்டு
கரும்பையும் சேர்த்துக் கட்டி...

முக்கோண வடிவ அடுப்பில்,
மண்பானை மெல்லச் சிரிக்க
ஏற்றி வைத்த குத்து விளக்கும்...
தீப ஒளியை சுடர் பரப்பும்..!

பண்பாட்டு உடை உடுத்தி,
கும்பம் வைத்து மாலை போட்டு,
பன்னீர் தெளித்து பூவும் வைத்து,
ஊதுபத்தி நறுமணத்தில்
உள்ளத்திலே ஆனந்தம் பூக்கும்..!

திருநீற்று நெற்றியிலே
சந்தனப் பொட்டும் பளபளக்க,
மங்களம் கமழும் குங்குமமும்...
அழகுக்கு மேலும் அழகு சேர்க்கும்..!

பொங்கலுடன் பழங்களும்,
பலவகைப் பலகாரங்களும்,
படையல் வைத்து வழிபட்டு
பக்தியோடு தேவாரம் இசைத்து...

ஊருக்கே பொங்கல் பரிமாறி
உறவு வளர்த்து உள்ளம் பூரித்து,
சொந்தங்களும் பந்தங்களும்,
நேசம் வளர்த்து நெஞ்சம் மகிழும்
தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் திருநாள்..!

**- வேலணையூர் ரஜிந்தன்-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அது ஒரு பொற்காலம்

ஆச்சி அப்பு வாழ்ந்த காலம்
அது ஒரு பொற்காலம்
பஞ்சபூதங்கள் அவர் தம் கடவுள்
இயற்கையே அவர் தம் தெய்வம்

காலை எழுந்தவுடன் குளித்து முழுகி
குவளையில் தண்ணீர் தரையில் தெளித்து
தீபம் ஏற்றி மலர்கள் தூவி
சூரிய நமஸ்காரம் செய்திடுவார்-அப்போது

ஆலயங்கள் தோன்றவில்லை
ஆணவங்கள் தோன்றவில்லை
நான் நீ என்ற வேறுபாடு
அவர்களிடம் வந்ததில்லை

எட்டுத்திக்கும் ஆலயங்கள் - இப்போது
ஏட்டிக்குப் போட்டியாய் திருவிழாக்கள்
சண்டையும் சச்சரவும்
ஏச்சுக்களும் பேச்சுக்களும்
கச்சேரியாய் முழக்கமிடும்

உரலிலே நெல்லிட்டு
உலக்கை போட்டு அரிசியாக்கி
மண்பானையில் அரிசியிட்டு
சோறு சமைத்து உண்டவர்கள்

ஆட்டுக் கல்லில் உழுந்தரைத்து
தோசை சுட்டு உண்டவர்கள்
அம்மியில் சரக்கரைத்து
அரைத்த கறி உண்டவர்கள்

தண்ணீர் குடமெடுத்து
நாரியில் வைத்தவர்கள்
நாளாந்த வேலைகளில் நாளாந்த உடற்பயிற்சி
நோய் நொடியின்றி வாழ்ந்த காலம் அது

உரலையும் காணவில்லை
உலக்கையும் இன்று இல்லை
ஆட்டுக் கல்லும் போனது
அம்மிக் குழவியும் மறைந்தது

மின்சாரத்தில் சம்சாரம்
கலந்து விட்ட காலமிது
எவர் சில்வர் பாத்திரங்கள்
அடுக்களையில் நிறைந்திருக்கு

காஸ் குக்கரில் சோறு கறி வேக
மிக்சி கிறைண்டரில்அரையலும் துவையலும்
ஒரு மணி நேரத்தில் சமையல் முற்றுப்பெற
தொலைக்காட்சியில் தொடர் நாடகம் ஆரம்பம்
இதுவா வாழ்க்கை.....?

உண்மையாய் உள்ள படி
ஆச்சி அப்பு வாழ்ந்த காலம்
அது ஒரு பொற்காலம்

**-பொன் நகுலன்-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்த்தியான சமூக உருவாக்கத்தில் கலை இலக்கியப் படைப்புகளின் பங்கு.

இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள் என்கின்ற நோக்கிலே இளம் சிறார்களில் இருந்து பெரியவர்கள் வரை கலை இலக்கியத்திலே நாட்டம் கொண்டவர்களாய் திகழ்கின்றார்கள் இவர்களின் தன்னார் வத்தையும் திறனையும் இனங்கண்டு அவர்களை நல்லவர்களாகவும் வல்ல வர்களாகவும் ஆக்குவதனூடாக தன்னையும் தான் சார்ந்த சமூகத்தையும் நேசித்து சமூகத்தை சீர்மியம் மிக்க விழுமியப் பண்புகளோடு மிளிர வைப்பதற்கும் தம்மாலியன்ற பணிகளை சமூகத்திற்கு ஆற்றுகின்ற தகமையினை தம்மகத்தே கொண்டு மிளிர வேண்டும்.

அவ்வகையில் இலக்கிய வட்டம் போன்ற அமைப்புக்கள் பாடசாலை மாணவர் களிடையே கவிதை, கட்டுரை போட்டிகளை நடாத்துதல் அவர்களின் கலை இலக்கியத் திறன்களை கண்டறிந்து உரிய வழியில் வளர்த்தெடுத்தல், ஆக்கத்திறன் செயற் பாடுகளோடு ஈடுபடுத்துவது இச் செயற் பாட்டை இளம் தலைமுறையினரிடையேயும் வளர்ந்தவர்களிடையேயும் பரிணமிக்க செய்வதை தமது நோக்கமாகக் கொண்டி ருத்தல் வேண்டும்.

கலை இலக்கியப் படைப்புக்கள் மக்களின் வாழ்க்கையை பொருளாகக் கொண்டு எழுந்தவை. அவை மனிதன் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கான வழி வகைகளை கூறுவனவாயுள்ளன. மனித குலத்தின் கலாச்சாரங்கள், நம்பிக்கைகள், மரபுகள் ஆகியவற்றின் அடித்தளமே இது. பண்டைய உலகத்தின் காலத்தில் இலக்கியம் உள்ளது. வார்த்தைகள் மற்றும் மொழிகளின் கண்டுபிடிப்பு இல்லாமல் கூட, முந்தைய மனித நாகரிகங்களில் இலக்கியம் ஏற்கனவே வெளிப்படுத்தப்பட்டது. கல் குகைகள் உள்ளே சுவர்களில் சுவடிகள் மற்றும் ஓவியங்கள் வரலாற்றுக்கு முந்தைய மக்களின் வாழ்வைப் பற்றிய சான்றுகளை அளிக்கின்றன

இலக்கிய வட்டம் கவிதை உரைநடை எழுத்திலக்கியங்களுடன் நடனக்கலை நாடகக் கலை இசைக்கலை போன்ற கலைப் படைப்புக் களையும் முன்னெடுத்துச் செல்லுகின்ற சக்தி மிக்க வட்டமாக மிளிர வேண்டுமென்ற எனது ஆதங்கத்தை வெளிப்படுத்துகின்றேன்.

சமூகத்தின் எழுச்சிகள் வீழ்ச்சிகள் மற்றும் கலாச்சார விழுமியங்களைப் பிரதிபலித்து, மக்கள் வாழ்வைப் பண்படுத்தி, ஆன்மீக வாழ்வுக்கும் வழி சமைத்தல் வேண்டும்.

நடனக் கலைகள் அவற்றிற்கே உரித்தான கலையம்சங்களுடனும், தத்து வார்த்தத்துடனும் இன்பமயமான இவ்வியல் புடன் ஆன்மீக உணர்வுகளை மிளிர வைப்பனவாயும் நாடகங்கள் வாழ்வியலின் புறநடை அம்சங்களை விடுத்து மக்களுக்கு நேரிய வாழ் முறைகளை, ஒழுங்குகளை, நல் மனப்பாங்குகளை, நேரிய சிந்தனைகளை, ஏற் படுத்துவனவாயும் அமைய வேண்டும்.

ஆன்மீக சிந்தனையற்ற மிருகத் தனமான வாழ்வியல் முறைகளுள் வீழ்ந்து மீட்சியற்று உழலும் நிலைகளை மாற்று வதற்கான அறநெறிப் போதனைகளும் ஆலயங்களில் பஞ்ச புராணங்களை இசையுடன் ஓதுவித்தல், மற்றும் ஆன்மீக சொற்பொழிவுகளை நடாத்தி ஆலயங்களை ஒட்டிய கலைகளையும் அறங்களையும் வளர்த்தலாகிய பணிகளை ஆற்றவேண்டும். நவநாகரீகம் என்ற பெயரில் கேளிக்கை களாகவும், களியாட்டங்களாகவும் மாறிவரும் பழக்க வழக்கங்களில் இருந்து சமூகத்தை மீட்டெடுத்து, உயர் பண்பாடு பாரம்பரியம் கலாச்சாரம் போன்றவற்றோடு கூடிய மக்கள் கூட்டத்தை வளர்ப்பதனூடாக சமூகத்தை அனைத்து விடயங்களிலும் முன்னோக்கி நகர்த்துவதையே நோக்கமாக கொண்டி ருத்தலே இலக்கிய வட்டத்தின் வெற்றிக்கு வழி வகுக்கும்.

"நெஞ்சத்து நல்லம் யாம் என்னும் நடுவு நிலைமையால் கல்வி அழகு அழகு."

**ஆக்கம்:**
**திருமதி புவனேஸ்வரி இராசநாயகம்**
**துறையூர் வேலணை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விழித்தெழு தமிழா ! விழித்தெழு!

காலமிது கலியுகமாய் போகிறதே!
கல் நெஞ்சு மனிதமெல்லாம்
காசு சேர்க்க அலையுதுவே!
காசு என்னும் காகிதமே
சங்கீதம் பல பேசுகிறதே!

துள்ளி விளையாடும்
பள்ளிப் பருவமதில்
பண்பாட்டை மறந்து
தடம்மாறிச் செல்கிறதே
பள்ளிக் குருவிகள்.

தொழில்நுட்பக்காலமிது.....
தொல்லைகள் பல நிறைந்திருக்கு
விஞ்ஞானக்காலமிது.....
விந்தைகள் பல விளைந்திருக்கு.......
மனிதருடன் மனம் விட்டு
பழகிய காலம் மரித்திங்கே
இயந்திரம் உயிர் பெற்று
மனங்களை மௌனமாக்கியதே......

உறவுகள் சுற்றியிருந்தும்
சிரித்துப்பேச நேரமில்லை
உற்றவர் அருகிருந்தும்
உணர்வை பகிர தோன்றவில்லை
நம் பண்பாடும் மறக்கிறது....
பாரம்பரியம் அழிகிறது......

தமிழ்த்தாய் அலறுகிறாள்
தமிழ் பேச தயங்கும்
தன் பிள்ளைகளின்
நிலையெண்ணி.......

பாவாடை தாவணியில்
பாவையரின் எழில் வண்ணம்
பாருக்கும் தெரியாமல்
அருகித்தான் விட்டதுவே...!
ஆடவருக்கும் வேட்டி சட்டை
வேடிக்கையாய் ஆனதுவே.....!

தமிழா நீ.......
தமிழ் தாயின் நிலையை
கேள்விக்குறி ஆக்கிடாதே...?
வேற்றவர் எம்மை ஆட்கொள்ள
வழி தனைவிட்டிடாதே

விழித்தெழு தமிழா ! விழித்தெழு!
தமிழ் தாயை மகிழ்வித்து
தமிழன் என்று பறைசாற்றி
தனித்துவமாய் வாழ்ந்திடுவோம்
விழித்தெழு!

**வேலணை மண்ணின் மகள்**
**-கு.மாருதி-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித சமுதாயத்தில் இலக்கியத்தின் பாத்திரம்.

இலக்கியம் சமுதாயத்தின் பிரதிபலிப்பு என்பது பரவலாக ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மையாகும். இலக்கியம் என்ற சொல் தமிழில் இன்பியல் இலக்கியத்தையே பெரும்பாலும் குறித்து நிற்கின்றது. இலக்கியத்தின் மறு பாதியான அறிவியல் இலக்கியப்படைப்புக்கள் மிகவும் அரிதாகவே சங்ககாலம் தொட்டு இருந்து வருகின்றது. சமகாலத்தில் அறிவியல் இலக்கியப் படைப்புக்களின் அவசியம் வளர்ச்சியினை நாடும் சமூகங்களால் உணரப்பட்டு வரவேற்கப்படுகின்றன.

அறிவியல் இலக்கியமே சமூக மாற்றங்களுக்கான உந்து சக்தியாக அடையாளம் காணப்படுகிறது. இலக்கியத்தின் உண்மையான பொருள் பல்வேறு வடிவங்களில் எழுதப்பட்ட வேலைகளின் எழுத்துக்கலை என்பதாகும். இலக்கியம் புத்துணர்வூட்டி மற்றும் மனதை ஊக்கப்படுத்துவதற்காக எழுதப்பட்ட ஒன்று. இது மனதில் எண்ணங்கள் மற்றும் உணர்வுகளை பதிவு செய்கிறது.

இலக்கியம் சமுதாயத்தின் மீது செல்வாக்கு செலுத்துகின்றது சமுதாயம் இலக்கியத்தை பிரதிபலிக்கிறது. சற்று விரிவாக கூறுமிடத்து இலக்கியம் உண்மையில் சமுதாயத்தை, அதன் நல்ல மதிப்பையும், அதன் குணாம்சங்களையும் பிரதிபலிக்கிறது. சமுதாயத்தில் காணப் படக்கூடிய தீங்குகள் அனைத்தையும் காட்சிப்படுத்தும் இலக்கியப்படைப்புக்கள் சமுதாயம் தன் தவறுகளை உணரவும் திருத்தங்கள் செய்யவும் உதவுகின்றது. அத்துடன் உயரிய பண்புகளை சமுதாயத்துக்கு எடுத்துச் சொல்வதுடன், மனிதர்களது செயல்பாடுகளின் பிரதிபிம்பமாக இருந்து சமுதாயத்தில் மக்கள் என்ன நினைக்கின்றார்கள் என்ன பேசுகின்றார்கள் என்ன செய்கின்றார்கள் என்பதை அவ்வப்போது மானிட சமூகத்துக்கு காட்சிப்படுத்துவதனூடாக சமூக வளர்ச்சிக்கான அடிப்படைகளை இலக்கியப் படைப்புக்கள் செம்மைப்படுத்துகின்றன என்ற உண்மைகளை வரலாறுகள் நமக்கு கற்பித்திருக்கின்றன, கற்பித்து வருகின்றன.

முந்திய, மத்திய, பிந்திய காலத்திய இலக்கியப் படைப்புக்கள், அந்தந்தக்காலத்திய மனித சமுதாய வாழ்க்கை முறை மற்றும் செயல்கள் பற்றி பல கோணங்களில் சித்தரித்துக் காட்டியிருக்கின்றன.

அவ்விதம் சித்தரிக்கப்படும் கதைகளில் அதில் வரக்கூடிய பாத்திரங்களினூடாக அவர்களது வார்த்தைகள், செயல் மற்றும் எதிர்வினைகள் மூலம், கல்வி, கலை கலாச்சாரம், அந்தந்த காலங்களில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த அறங்கள், சமூக ஒழுங்கமைப்பு போன்றவையுடன் சமூகத்திற்கு கேடற்ற பொழுதுபோக்கு ஆகியவற்றின் வளர்ச்சி தொடர்பான செய்திகளை வெளிப்படுத்தும் ஊடகங்களாக செயல்பட்டு மனித குலத்துக்கு அரும்பணியாற்றி வந்திருக்கின்றன.

சமுதாயத்தின் மனோபாவங்கள், அது அடியொற்றும் அறங்கள் மற்றும் இயக்க விதிகளை ஒதுக்கித் தள்ளும் இலக்கிய படைப்புக்கள் சமூகத்துக்குள் நுழைவது முடியாத காரியம். கலை இலக்கியப்படைப்புக்கள் சமூகத்தின் பிரதிபலிப்பாக மட்டுமல்ல, சமுதாயத்தின் உறுப்பினர்கள் தங்களைத் தாங்கள் கவனிக்கவும் நேர்மறையான மாற்றத்திற்காக தம்மை தயார்படுத்திக்கொள்ள உதவுகின்ற வழி காட்டிகளாகவும் சமூகம் தனது தவறுகளை கண்டு கொள்ளத்தக்கதான திருத்தக் கண்ணாடிகளாகவும் இலக்கியப் படைப்புக்கள் தொடர்ச்சியாக பணியாற்ற வேண்டும்.

இலக்கியம் உண்மையிலேயே எவ்வாறு சமுதாயத்தை பிரதிபலிக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள, சில இலக்கிய படைப்புகளை நெருங்கிப் பார்ப்பது அவசியம். ஒரு எழுத்தாளர் தனது எழுத்துக்களை தனது ஆயுதமாகக் கொண்டு ஒரு போர்வீரனாக இருக்க முடியும். ஒரு இலக்கியப் பகுதியை எழுதுவதன் மூலம் அவர் தனது நாட்டிலுள்ள ஊழல் மற்றும் முறைகேடுகளை தோற்கடிக்கும் ஒரு புரட்சியாளனாக திகழ முடியும். புரட்சிகளின் நிறைவேற்றத்தில் இரத்தம் சிந்தி போராடும் அவசியத்தை இலக்கியப் படைப்பாளர்கள் இல்லாமல் செய்ய வேண்டும்.

இயற்கையாகவே, உணர்ச்சிகளை வெளிப்படுத்த மொழி சக்தி நமக்கு இருந்தால், நாம் சமூகம் சார்ந்த கலை இலக்கியப்படைப்புக்களை உருவாக்கும் நிலையில் இருக்கின்றோம் என்பதை புரிந்து கொண்டு சமூகப் பயன்பாடுள்ளதும் மனித குலத்தை அறியாமையிலும் மடமைத்தனத்திலும் இருந்து விடுவித்து அவர்களது நற் சிந்தனை வளர்ச்சிக்கு தீனி தர வல்லதுமான மனித குலத்துக்கே உரியதான நல்லறங்களை சுட்டிக்காட்டுபவையுமான படைப்புக்களை தருவதன் மூலம் நேர்த்தியான அறங்களை பேணி வாழ்கின்ற ஆரோக்கியமான சமூக வளர்ச்சிக்கு உரமிடுவோம்.

"நல்ல இலக்கியப் படைப்புக்கள் ஒரு மனிதரை இன்னொரு மனிதருக்குள் பிரயாணம் செய்ய வைக்கிறது"

நன்றி

-துறையூர் காசி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்ப்பு

ஏ
மனிதமே!
தேசம் எங்கும்
தேடித்திரிந்தேன்

உன்னை மண்ணுக்குள்
புதைத்து
புழுக்கள் மேல்
உண்ணிகளாய்...

நீ தொலைந்த பூமியில்
சிறு மரங்கள் கூட
துளிர்க்கவில்லை.
கடற்கரை மணல் சுடுகிறது..உன்
காலடி அடையாளம் ஏதுமில்லை..
காகங்கள் கரைவதில்லை
இரை போட யாருமில்லை
ஆனாலும்
எங்கோ தொலை தூரத்தில
பறவைகளின் ரீங்காரம்
காற்றில் தத்தளிக்கிறது....

கோவணம் இழந்த பாவியும்
கோவணம் பறித்த சாமியும்
அல்லாக்காய் படுக்க
கடவுளோ பரவச நிலையில்....

காதல் செத்த காமம்
சாதி விந்து தெறித்த
சிசுக்களின் ஓசைகள்....

கூழுக்கும் உதவா
கூலிக் கல்வியை
முண்டி விழுங்கிய
பட்டத்து ராஜாக்கள்
உலக வங்கியையும்
கன்னி கழியா மங்கையையும்
நரை விழும் கிழம் வரை
நாக்கை தொங்க விட்டபடி.....

சமூகம் சிகழ் வழிந்து
நாறும் என் தேசத்தில்

ஒட்டி உறிஞ்சும் உண்ணிகளை
ஒவ்வொன்றாய் புடுங்க
மீண்டும்
நீ
எப்போது உயிர்ப்பாய்.....

- தேவதாசன் -

# ஓ மானிடனே

- ரவீந்திரன் விஜிதா-

ஓ மானிடனே
அன்று மடிந்த மனித நேயம்
இன்னும் மீளவில்லை
மக்கள் மனதில் இன்னும் மீளவில்லை

ஈழத்தமிழ் பெருமை காத்து
இடம் பிடித்த மனித நேயம்
ஈழத்தமிழர் மாய்ந்ததுமே -இருண்டதுதான்
அவையும் சேர்ந்து

பஞ்சமா பாதகங்கள் பயமின்றி முன்னேற
பண்பாடும் கலாச்சாரமும்
பாதியோடு நின்றிருக்க
மக்கள் மனம்தனிலே சுயநலங்கள் விருட்சமாக
மாய்ந்து தான் சென்றது மனித நேயம்.

மனிதர்கள் எல்லாம் மிருகமாய் மாறினர்
கருணை உள்ளோர் காணாமல் போயினர்
மனித நேயம் காக்க மாண்டவர் கனவுகள்
மண்ணோடு மண்ணாகப் போயினவே

மதப்போரில் மாய்ந்ததாம் மனித நேயம்
இல்லை இல்லை
மனிதர் செயலினாலே மாய்ந்தது
மனிநேயம் அது மதத்திற்கு அப்பாற்பட்டது
எந்த மதமும் சொல்லவில்லை
மனிதநேயம் தனை மறக்க

மாறி வரும் உலகம்தன்னில்
மனித நேயத்தோடு வாழுங்கள்
இல்லையேல்
மனிதர் என்னும் சொல்லை
மாற்றிக் கொள்ளுங்கள் மிருகம் என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனித நேயம் - சிறுகதை

ஆக்கம்- க.இராசரெத்தினம்

மாரிகாலம் தனது சேவையைச் செய்து கொண்டிருந்தது. நேரமும் ஆறு மணி ஆகிக்கொண்டிருந்தது. ரீயூசனுக்கு போன மதுசா இன்னும் வரவில்லை. பொழுதுபட்டும் என்ன செய்யிறாள். தாய் கமலா வாய்க்குள் முணுமுணுத்துக்கொண்டு வெளியில் கிடந்த உடுப்புக்களை உள் கொடியில் காயப் போட்டுக் கொண்டு இருக்கும் போது, "கமலாக்கா கமலாக்கா" கேற்றடியில் நின்று கொண்டு மணியக்கா கூப்பிட எட்டிப்பார்த்து விட்டு "ம் ஏதோ விடுப்புக்கேட்க வாற போல இருக்கு" என்று மனதில் நினைத்துக்கொண்டு "வாங்கோக்கா" என்று கூப்பிட "நாயைப் பிடியுங்கோ" என்று கூறிக்கொண்டு உள்ளே வந்தாள் மணியக்கா.

"என்னக்கா கன நாளைக்குப் பிறகு பொழுதுபட்ட நேரம்" என்று சலிப்புடன் கேட்க "ஓமக்கா வருவம் வருவம் எண்டு நெடுக நினைக்கிறது எங்க நேரம்" என்று கூறிக் கொண்டு "அதுசரியக்கா இண்டைக்கும் உங்கட வசந்திய பொம்பிளை பார்க்க வந்தவை யாம் என்ன சரி வந்திட்டுதோ" என்று கவலை கொண்டவள் போல கேட்டாள் மணியக்கா. "ஓமக்கா இண்டைக்கு மட்டுமே வந்திட்டு போகினம் பிள்ளைக்கு இருபத்தைந்து வயது ஆகினதில இருந்து தானே வந்திட்டு போகினம்" என்று துக்கம் தாங்க முடியாமல் வார்த்தைகளை விட்டாள் கமலா. "அது சரி வசந்தி என்னக்கா சொல்லுறாள்." என்று அனுதாபத்தோடு கேட்பது போல கேட்டாள் மணியக்கா. "அவள் என்னக்கா இருபத் தொன்பது வயசாகுது அவள் இப்பவும் ஏனம்மா அவசரப்படுறியள் நான் கலியாணம் கேட்டனானோ என்று தானே கேட்கிறாள்" என்று மன வருத்தத்துடன் கூறினாள் கமலாக்கா.

வசந்தி கமலாக்காவுக்கு மூத்த பெண். மதுசா, நிசா என இரு தங்கைகளுடன் பிறந்தவள். தந்தை மாயவன் ஒரு பொதுநல நோக்குடைய கூலித்தொழிலாளி மூன்று பெண் பிள்ளை களையும் படிக்க வைக்க வேண்டும் என்ற ஒரு கொள்கையுடைய நல்ல தந்தை பிள்ளைகளும் படிப்பில் ஆர்வம் உள்ள, ஆசையுள்ள, நல்ல பண்பானவர்களும் கூட வசந்தி A/L படிப்பை முடித்துவிட்டு பல்கலைக்கழகம் கிடைக் காததால் தனியார் நிறுவனம் ஒன்றில் பன்னி ராயிரம் சம்பளத்திற்கு இரண்டு வருடங்களாக வேலை செய்யிறாள். தங்கை மதுசா O/L படிக்கும் ஒரு மாணவி, தங்கை நிசா தரம்-7 படிக்கும் மாணவி, தாய் கமலாவும் சளைத்தவள் அல்ல கணவன், பிள்ளைகளுடைய வேலைகளைப் பார்த்து மிகுதி நேரங்களில் பாய் இளைத்தல், கிடுகு பின்னுதல் போன்ற கைத்தொழில்களில் ஈடுபடுவாள்.

இவைகளால் இவர்களின் குடும்ப நிலை சாப்பாட்டுக்கு கையேந்தும் நிலை இல்லா விட்டாலும் படிப்பு, ரீயூசன், உடுப்புக்கள் என்கிற போது கொஞ்சம் கையைக்கடிக்கத்தான் செய்கிறது. இருந்தாலும் ஒறுப்பனவு பழக்கத்தை கைக்கொள்கிறபடியால் ஏதோ கஸ்ரம் இல்லாமல் காலம் ஓடிக்கொண்டிருக்கிறது. இந்த நிலையில் வசந்திக்கு கலியாண வயது வேகமாக சென்று கொண்டிருந்தாலும் பெற்றோர்கள் தாமாக இன்னும் வரன் தேட முயலவில்லை. ஏனெனில் அவர்கள் இருக்கும் பழைய வீட்டைத்தவிர அவர்களிடம் பெரிதாக பணமோ, நகையோ இன்னும் சேமிக்க முடியவில்லை. இருந்தாலும் வெளிநாட்டில் இருக்கும் கமலாவின் அண்ணன் நரேசிற்கு குழந்தைகள் இல்லை. அவர் ஒருமுறை கதைக்கும் போது "வசந்திக்கு கலியாணம் ஏதாவது பொருந்தினால் சொல்லுங்கள் நான் சிறிய அளவில் ஏதாவது செய்கிறேன்" என்ற சொல் மட்டுமே அவர்களிடம் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் நிலை இப்படி இருக்கும் போது விடுப்புக்கேட்க வந்த மணியக்காவும் "நான் போட்டு வாறன் பிள்ள நேரம் போட்டுது" என்று எழும்ப "இருங்கோ ரீ குடிச்சிட்டுப் போங்கோ" என்று ரீயுடன் வந்தாள் வசந்தி. "ஏன் பிள்ளை சரி கொண்டுவா என்று ரீயை வாங்கி குடித்துவிட்டு விடைபெற்று சென்றாள் மணியக்கா. "அம்மா அம்மா" அறைக்குள் நின்று கொண்டு வசந்தி அழைத்தாள். "என்ன பிள்ளை கூப்பிட்டனியே" என்று கேட்டுக் கொண்டு வந்தாள் அம்மா. "ஓமம்மா இண்டைக்கு வந்தவை என்ன சொல்லிப் போட்டு போகினம்" வசந்தி கேட்டாள். "என்னம்மா சொல்லுறது முந்தி வந்தவையள் சொல்லிப்போட்டு போன மாதிரித்தான் போய் போன் எடுக்கிறம் என்று சொல்லிப்போட்டுப் போகினம்". என்றாள் அம்மா.

வசந்தி கேட்டாள் "உங்களுக்கு என்னம்மா விசரே" "ஏன் பிள்ளை" அம்மா அதிர்ந்தாள். "எனக்கு இப்ப கலியாணம் அவசியம் என்று நான் எப்போவாவது சொன்னனானே" வசந்தி கோபத்தோடு கேட்டாள். "நீ கேட்கவில்லை என்றால் நாங்கள் தேடாமல் இருக்க முடியுமே. அதையும் விட நாங்களே தேடிப்போறம். புறோக்கர்மார் கூட்டிக்கொண்டு வாறங்கள், கதைக்கிறாங்கள், சீதனத்தை கேட்கிறாங்கள் நாங்கள் எங்கட நிலையைச் சொல்ல சொல்லாமல் கொள்ளாமல் எழும்பிப் போறாங்கள்." தாய் விபரித்தாள்.

"அம்மா நான் சொல்லுறன் எண்டு குறை நினைக்காதேங்கோ, சீதனம் கனக்க கேட்காத ஒரு மாப்பிள்ளையின்ர குறிப்ப புறோக்கர்மார் கொண்டு வரமாட்டினம். இனி அப்பிடி ஒரு புறோக்கர் வந்தா நாங்க பாத்திட்டம் எண்டு மட்டும் சொல்லுங்கோ" என்று வசந்தி கூறி முடித்தாள். வசந்திக்கு குடும்ப நிலை நன்கு தெரியும். அவள் நல்ல உடற்கட்டான சுமாரான அழகி தான். பொது நிறமானவள். நீண்ட கூந்தலை உடையவள். அவளை வரன்களுக்கு பிடிக்காததன் காரணம் சீதனம் பற்றாக்குறை மட்டுமே.

"வசந்தி வசந்தி எங்கயம்மா நிக்கிற" என்று தந்தை கூப்பிட விறாந்தைக்கு வந்தாள் வசந்தி. "என்னப்பா கூப்பிட்டனீங்களோ" என்று கேட்க "ஓமம்மா இந்த காட்டை ஒருக்கா போனில ஏத்திவிடு" என்று சொல்ல "நில்லுங் கோப்பா நான் ஏத்திறன் பாருங்கோ நெடுக என்னைக் கூப்பிடாம" என்று சொல்லி தந்தைக்கு காட்டிக்கொடுத்தாள். "ஓமம்மா அதுவும் நல்லது தான்" என்று சொல்லிக் கொண்டு "அது சரி எங்கயம்மா கூடையோட வெளிக் கிட்டிட்ட" என்று தந்தை கேட்க, "நாளைக்கு என்ர பிறந்த நாள் தானே அதுக்கு நான் வேலை செய்யிற நிறுவனத்தில் இருந்து கொஞ்ச பிள்ளையளும் எங்கட மேலாளரும் வருகினம் அவைக்கு ரீப்பாட்டி வைக்கவேணும் அதுதான் கொஞ்ச சாமான் வாங்க சந்தைக் குப்போறன்." என்று வசந்தி கூற "சரியம்மா போய்யிற்றுவா" என்று கூறிக் கொண்டு தந்தை வாளியைத் தூக்கிக்கொண்டு குளிக்கப்போய் விட்டார்.

வசந்தியின் பிறந்தநாள் ரீப்பாட்டி நடந்து ஒரு கிழமை இருக்கும். ஒருநாள் வசந்தியின் வீட்டிற்கு ஒரு நாற்பத்தைந்து, ஐம்பது வயது மதிக்கத்தக்க அம்மாவும், ஐம்பது, ஐம்பத்தைந்து வயது மதிக்கத்தக்க ஐயாவும் வந்தார்கள். வந்து கேற்றுக்குள் நின்று கொண்டு "வீட்டுக்காரர்" என்று அழைக்க "யாரது உள்ளே வாருங்கள்" என்று வசந்தியின் அம்மா அழைக்க உள்ளே வந்தார்கள். வசந்தியின் அம்மா "நீங்கள் யாரென்று தெரியவில்லை" என்று இழுக்க "இது வசந்தியின் வீடு தானே" என்று வந்தவர்கள் கேட்க "ஓமோம் வசந்தி வேலைக்கு போட்டா சொல்லுங்கோ" என்று தாய் அவசரப்பட "தெரியும் உள்ளே இருந்து கதைக்கலாமா?" என்று வந்தவர்கள் கேட்க "ஓமோம்" என்று கூறி பதட்டத்தில் கதிரையை இழுத்துப் போட்டாள் வசந்தியின் அம்மா.

கதிரையில் இருந்து கொண்டு வந்தவர் கேட்டார் "உங்கட அவர் இல்லையோ?" "இல்லையுங்கோ அவர் பின்னேரம் தான் வருவார்." தயங்கியபடி சொன்னாள் கமலா. "சரி பராவாயில்லை நீங்களும் இருங்கோ நாங்க வந்த விசயத்தை சுருக்கமாகச் சொல்லுறம்". வந்தவர் கூறத்தொடங்கினார்.

"நாங்க உங்கட வசந்தி வேலை செய்யுற நிறுவனத்தின்ர மேலாளர் பதவியில இருக்கிறவற்ற அப்பாவும், அம்மாவும். அவர் எங்களுக்கு ஒரேயொரு பிள்ளை தான். நாங்க பெரிய பணக்காரரும் இல்லை ஆனால் கஸ்ரநிலையும் இல்லை ஒரு பெரிய வீடும் அதோட பதினைந்து பரப்புக் காணியும் தான் எங்கட சொத்து. மகனுக்கு 32 வயது ஆகுது நாங்க அவருக்கு ஒரு கலியாணம் கூட பேசவில்லை ஏனென்றால் அவர் ஒரு கொள்கை யோட இருக்கிறார். அதாவது ஒரு குடும்பத்தில போய் சீதனம் கேட்டு பேரம் பேசக்கூடாது. நாங்களாக போய் ஒருவரிடமும் பெண் கேட்கக் கூடாது. தனக்கு பிடித்த பெண் தனது கண்ணில் சந்திக்கும் வரை தான் காத்திருப்பேன். என்று சொல்லி விட்டார். இருபத்தாறு வயதில் இருந்தே நாங்கள் அவற்ற இந்தக்கட்டளையால பேசாமல் இருந்திட்டம்" என்று ஒரு மூச்சில் கூறி முடித்தார் வந்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வளவையும் கேட்டுக் கொண்டிருந்த தாய் பொறுமையிழந்தவள் போல் "நீங்கள் வந்த விடயத்தை இன்னும் கூறவில்லையே" என்றாள். "அவசரப்படாதயுங்கோ விசயத்திற்கு வாறன்" என்றவர் தொடர்ந்து கூறினார். "போன கிழமை உங்கட வீட்ட நடந்த பிறந்தநாள் பாட்டிக்கு வசந்தியின் பிரண்சுகளோட வந்தவர் தான் என்ர மகன். அவருக்கு வசந்திய பிடித்தது மட்டுமல்ல அவருடைய நடவடிக்கைகள், பழக்கவழக்கங்கள், அம்மா, அப்பாவின் பேச்சுவார்த்தைகள், குடும்பச்சூழல் எல்லாமே பிடிச்சு போச்சு அதனால எங்கள போய் வசந்தியையும், அவங்கட அப்பா, அம்மாவின்ர விருப்பத்தையும் கேட்டு அவை விரும்பினா கலியாணத்திற்கு ஒழுங்கு பண்ணுங்கோ என்று கூறினார். நாங்களும் உடனடியா வெளிக்கிட்டம் ஏனெனறால் வாழப்போறது அவை தானே அவற்ற விருப்பமும் தான் எங்கட விருப்பமும்" என்று கூறி முடித்தவுடன் "இப்ப அவசரம் இல்லை உங்கட வீட்டுக்காரர் எல்லோரும் வந்த பிறகு நல்ல யோசிச்சு முடிவு சொல்லாலம்" என்றபடி போன் நம்பரையும் கொடுத்தார்.

"நீங்கள் இந்த நம்பருக்கு எடுத்துச் சொன்னா பிறகு மற்ற வேலைகளைப் பார்க்காலாம்." என்று கூறி முடித்தார் வந்தவர். வசந்தியின் தாய்க்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. மனதில் மகிழ்வொன்று இருந்தாலும் அதனைக் காட்டிக்கொள்ளாமல் எதற்கும் வசந்தியையும் கேட்டுட்டு, நாங்களும் யோசிச்சு சொல்லுறம்". என்று கூறி "இருங்கோ ரீ குடிச்சிட்டுப்போங்கோ என்று சொல்லி எழ "இருக்கட்டும், இருக்கட்டும் ரீ மட்டுமில்லை சாப்பிடக்கூட வருவம் உங்கட பதிலுக்குப் பிறகு நாங்கள் போயிற்று வாறம்." என்று விடைபெற்றுக்கொண்டு சென்றார்கள்.

வசந்தியின் தாய்க்கு தலைகால் புரியவில்லை. இந்தக்காலத்தில் இப்படிக் கொள்கையுடையவர்களும் இந்தப் பூமியில் இருக்கிறார்களா? என நினைத்துப் பூரித்துக் கொண்டிருந்த போது முதலில் வேலையை முடித்துக் கொண்டு வசந்தி தான் வந்தாள். வசந்தியைக் கண்டதும் தாயக்கு சந்தோசம். தாளவில்லை. வசந்தி வந்து உடுப்புக்களை மாற்றிக்கொண்டு "என்னம்மா சாப்பாடு" என்று கேட்க தாயும் "வசந்தி இஞ்ச வாவன் சாப்பாட்டுக்கு முதல் நல்ல சந்தோசமான விசயம் ஒன்று சொல்லுறன்" என்று கூறி கல்யாணம் கேட்டு வந்ததை ஒன்றும் விடாமல் கூறி முடித்தாள் தாய்.

வசந்திக்கு ஒன்றுமே புரியவில்லை. இப்படி ஒரு சம்பவம் நடந்திருக்குமா? என எண்ணத்தோன்றியது. "அம்மா, அப்பா வந்த பிறகு கேட்டுட்டு என்னாவாலும் செய்யுங்கோ. இப்ப எனக்கு சாப்பாட்டத் தாங்கோ" என்று கூறிக்கொண்டு குசினிக்குள் போய்ச் சாப்பிட்டு விட்டு "உடுப்பு மடிக்கப்போறன் என்னை ஒன்றுக்கும் கூப்பிடாதயுங்கோ" என்று சொல்லி வீட்டுக்குள் போய் இருந்து தனது மனக்கு திரையை ஓட விட்டாள்.

மேலாளர் சுரேஸ் பன்னிரண்டு பெண்களும், நான்கு ஆண்களும் வேலை செய்யும் நிறுவனத்தில் ஓர் உயர் அதிகாரி அவருக்கு முப்பத்தொரு வயது இருக்கும். நிறுவனத்தில் சிரிக்கத் தெரியாதவர் என்றுதான் இவரைச் சொல்லுவார்கள். ஒருவருடனும் தேவையிலல்லாமல் கதைக்க மாட்டார்கள். இவர்கள் கொண்டு போகும் பயில்களுக்கு கையெழுத்து இடுவதும், வேலைத் திட்டங்களை கூறுவதும், இருபத்தெட்டாந் திகதி சம்பளத்திற்காக காசோலை வழங்கு வதுமே இவரது வேலைகளில் சில. ஒருநாள் கூட அவரது பார்வையில் ஒரு வித்தியாசம் தெரிந்ததில்லை. இவரா பெற்றோரை வீட்டுக்கு அனுப்பி யிருப்பார். அவளால் நம்ப முடிய வில்லை.

எப்படி நாளைக்கு வேலைக்குப்போய் அவரது முகத்தில் முழிப்பது அதையும் விட காசு, காணி, நகை, வீடு என்று அங்காலாயக்கின்ற இந்தக்காலத்தில் இப்படி ஒருவரா? புரிந்து கொள்ள முடியவில்லையே என்று யோசித்துக் கொண்டிருக்கும் போது அம்மா அழைக்கும் குரல் கேட்டு தன்னைச் சுதாகரித்துக் கொண்டு "இந்தா வாறனன் அம்மா" என்று கூறிக்கொண்டு வெளியே வந்தாள் வசந்தி. "பிள்ளை அப்பா வந்திட்டார் என்னம்மா சொல்ல" என்று கேட்டாள் தாய்.

"நான் என்னம்மா சொல்லுறது அப்பா விற்கு விருப்பம் எண்டால் போய் கதையுங் கோவன்" என்று பட்டும் படாமலும் கூறிவிட்டு போய்விட்டாள் வசந்தி. அம்மா, அப்பாவிற்கு முழுக்கதைகளையும் சொல்லி விட்டு என்னப்பா சொல்லுறது என்று கேட்க அப்பாவும் அவளுக்கு விருப்பம் எண்டா போனில கதைக்கிறது சரியில்லை நேரே போய்க்கதைப்பம் என்றார் புன்னகையுடன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறுமையின் விந்தில்..

சிந்துஷா அருட்பிரகாசம்
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

இமைகளை மூடி உறங்குவது போல்
இதயத்தில் இன்னல்களை சுமந்திருக்கும் மானிடா - என்
உள்ளத்திரை மூட மறுக்கின்றது உன் நிலை கண்டு..

வாழப்பிறந்த மனிதா இவை உன் தாயின்
கருவறையில் எழுதப்பட்ட விதியா?
பாரடா தோழா பாரில் நடக்கும் அதிசயத்தை பாரடா..

பட்டினிக்கூட்டமொன்று குப்பைகளை கோவிலாக மதிப்பதைப் பாரடா..
நாட்டை வல்லரசாக்க நாள் முழுக்க திட்டம் தீட்டும் நீதி மான்களே
இரையாக்கும் இம் மண்ணை ஆளத்துடிக்கும் மானிடன் - ஏனோ
இணையில்லா இம் மனித உயிர்களை மறந்து போனான்.

வீட்டையும் நாட்டையும் வெடி வைத்து சூறையாடும் விந்தை மனிதர்களே..!
வீட்டினதும் நாட்டினதும் வறுமையை வேட்டையாட நல்லதொரு
ஆயுதத்தை உருவாக்குங்கள் - உங்கள்
உலகளாவிய அறிவைக்கொண்டு

பட்டினிச் சிறையில் சிக்கி பரிதவிக்கும் இவர்கள் - பாரினில்
பஞ்சு மெத்தையும் பால் பழமும் கேட்கவில்லை
பாழாக்கும் சோற்றை இவர்களின் பட்டினிக் கணக்கில் போட்டுவிடுங்கள்
இந்த அழகான உலகை சுற்றி பார்த்துவிட்டு பறந்து செல்லும்
பட்டாம் பூச்சிகள் நாம் என்பதை மறந்து விடாதீர்கள்

# அலைகடல் ஓசையாய்

கடலோரம் சிறு குடிசை...
ஏழையவன் மாளிகையாம்!
கடலன்னை மடிதனிலே...
மீனவனின் வாழ்விடமாம்!

கடலை நம்பி வலை விரித்து...
கண் விழித்துக் காத்திருப்பான்!
கண்ணாளன் வரவை எண்ணி...
கண்ணீருடன் அவன் மனையாள்..!

ஏக்கத்திலே தொடரும் - இந்த
எளியவர்கள் வாழ்க்கை வட்டம்!
விடியல் தினம் கண்டதுண்டு...
இவன் வாழ்வில் விடியல் ஏது...?

அள்ளித்தந்த கடல்த்தாயும்...
அள்ளிச் செல்லும் கலிகாலம்!
சீற்றம் கொண்டால் காலநிலை'
ஏழை மகன் என்ன செய்வான்..?

அன்னியனின் அடாவடிகள்
கடல் நடுவில் அரங்கேறும்!
உடல் வருத்தி உயிர் பிழைத்து
கரை சேர்தலே போராட்டம்...!

கனவுகள் பல சுமந்த படி
கட்டுமரம் கடலில் செல்லும்!
அலைகடல் ஓசையாய் - நித்தம்
ஒலிக்கிறது மீனவன் குரல்!!

- வேலணையூர் ரஜிந்தன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதில் முன்பள்ளி ஆசிரியர்களது பங்களிப்பு

சிறுவர்கள் உலகத்தின் அருமையான செல்வங்கள் அவர்களது உலகம் மகிழ்ச்சியானது. சிறுவர்கள் சமூகத்தில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவர்கள். பிறந்தது முதல் 18 வரையான காலப்பகுதி சிறுவர்களுக்கு உரியது ஆகும். சிறுவர்கள் மீதான கொடுமைகள், துஷ்பிரயோகங்கள் போன்ற நிலைமைகளில் இருந்து சிறுவர்களைப் பாதுகாத்து அவர்களுக்கான உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதில் முன்பள்ளி ஆசிரியர்களது பங்கு பெரிதும் முக்கியமானது ஆகும்.

குழந்தை ஒன்று முதலில் சமூகத்தோடு தொடர்பு கொள்வது முன்பள்ளியிலே ஆகும். ஆகவே முன்பள்ளி ஆசிரியர்கள் தமது பிள்ளைகளுக்கான உரிமைகளை வழங்குவதன் மூலம் நல்ல பிள்ளைகளாக வளர்த்தெடுக்க முடியும்.

பிள்ளையின் வாழ்க்கையில் முதல் மூன்று வருடங்கள் மிகவும் முக்கியமான வருடங்கள் என பல்வேறுபட்ட ஆய்வுகள் கூறுகின்றன. இக் காலத்திலே மூளை உச்ச வளர்ச்சியடைகின்றது. இக்காலப்பகுதியிலே இடம்பெறும் வளர்ச்சியும் விருத்தியும் எதிர்காலத்திற்கான அத்திவாரத்தைப் போடுகின்றது. வாழ்க்கையில் முதல் மூன்று வருடங்களின் போதுள்ள வளர்ச்சி மிகவும் துரிதமாக இருக்கும் என கல்வியலாளரும் கூறுகின்றனர். எனவே இக்காலப் பகுதியில் சிறுவர்களுக்கான உரிமைகளைப் பாதுகாப்பது மிகவும் அவசியம்.

இவ்வாறான உரிமைகள் பேணப்படாத பிள்ளைகளிடம் உளத்தாக்கம், ஆளுமைப் பிரச்சனை,கற்றல் பிரச்சனை போன்ற பிரச்சனைகள் உடைய பிள்ளைகளாக இருப்பார்கள் என ஆய்வுகளும், கல்வியலாளரது சிந்தனைகளும் கூறுகின்றன. பிள்ளை சூழலுடன் ஊடாட்டம் கொள்வதன் அடிப்படையில் சிறுவர் உரிமையும் பாதுகாப்பும், சூழல் வழங்கும் வாய்ப்புக்களில் இருந்து நன்மை அடைவதற்கு பிள்ளைக்கு சுதந்திரம், பாதுகாப்புணர்வு என்பவற்றை முன்பள்ளி ஆசிரியர்களே வழங்க வேண்டும்.

மேலும் சமுதாயத்திற்கு நற்பிரஜை உருவாவதற்கான அடித்தளம் இடப்படும் இடம் முன்பள்ளியே எனவும், ஆரம்ப நடத்தைக் கோலங்கள் உருவாவதும் முன்பள்ளியிலே ஆகும். எனவே இவ் வயது மட்டத்தில் சிறுவர் உரிமை பாதுகாக்கப் படாது மீறப்படும் இடத்து ஏற்படும் தாக்கம் ஆழ் மனதில் பதிந்து அக் குழந்தை நற்பிரஜையாக உருவாவது பாதிக்கப்படும். பிள்ளைகளின் தனித்துவமான திறமைகள் அடையாளம் காணப்படுவதற்கான களம் முன்பள்ளி ஆகும். ஆகவே தனித்துவமான திறமைகளுக்கு ஏற்ப எதிர்கால இலக்கு அமைக்கப்படுமாயின் பிள்ளையின் எதிர்காலம் பிரகாசமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சிறுவர் உரிமைகளை உயிர்வாழும் உரிமை, பங்குபற்றும் உரிமை, பாதுகாக்கும் உரிமை என வகைப்படுத்தி அவற்றினுள்ளே பிள்ளை என்பதன் வரையறை, பாகுபாடு காட்டமை, பிள்ளையின் சிறந்த நலன், கல்வி, சிறுவர்களை வேலைக்கு அமர்த்தாமை, பாலியல் ரீதியான சுரண்டலில் இருந்து பாதுகாப்பு, போன்ற உரிமைகள் சிறுவர்களுக்கு கிடைப்பதை முன்பள்ளி ஆசிரியர்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

மேலும் முன்பள்ளியின் அகப்புறச் சூழலினை சிறுவர் உரிமை, சிறுவர் பாதுகாப்பு, ஆகியவற்றை மேம்படுத்தும் வகையில் பட அட்டைகள், வாசகங்கள், சித்திரங்கள், என்பன எழுதியும் காட்சிப் படுத்த வேண்டும். பெற்றோருக்கு அடுத்த நிலையில் சிறுவர்களது நலமான வாழ்வில் அக்கறை கொண்டவர்களாக இருக்கின்ற முன்பள்ளி ஆசிரியர்கள் இன்றைய நிலையில் பிள்ளையின் நல்வாழ்வை பாதிக்கும் விடயங்களை இனங்கண்டு தீர்ப்பதற்கு முன்வரவேண்டும். இதற்காக பெற்றோருடன் கலந்துரையாடி நல்லுறவைப் பேணுவதன் மூலமும் சமூக நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து செயற்படுவதன் மூலமும் சிறுவர் உரிமை, சிறுவர் பாதுகாப்பினை பேணுவதில் முக்கிய பங்கினை முன்பள்ளி ஆசிரியர்கள் வகிக்கின்றனர்.

**ஆக்கம்- இராசரெத்தினம் பிரதீபா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிள்ளைகளின் கற்றலில் பெற்றோரின் பங்களிப்பு

கல்வித்துறையானது மனித மூலவளத்தில் தங்கியுள்ள ஒரு துறையாகும். எனவே தான் "கல்வி என்பது மனிதனின் அறியாமையினை அகழ்தல்" என்கின்றார் நன்னூலார். மாணவர்களைப் பரீட்சையில் வெற்றி பெறச் செய்வது கல்வியல்ல கற்பவனை வாழ்க்கைப் பரீட்சையில் வெற்றி பெறச் செய்வதே உண்மையான கல்வியாகும். ஒருவரிடம் நீண்ட காலம் நிலைத்திருக்கக் கூடிய சுய அறிவு, திறன், மனப்பாங்கு ஆகிய மூன்று துறைகளிலும் ஏற்படுகின்ற நடத்தை மாற்றமே கற்றல் என்பர் உளவியலாளர்கள். அனுபவங்களினூடாக சிந்தனையை வளப்படுத்துவதுடன் நடத்தையினைச் சீர் செய்வது கல்வியாகும்.

சமூகத்துடன் இணைந்து தனியாகவும் சமூகமயமாகவும் பொருளாதாரம், சமூகவாழ்வு என்பவற்றில் மேன்மையடையவும் கல்வி வழிவகுக்கும். மாணவர்கள் எழுத்தறிவு, எண்ணறிவு, மற்றும் வாழ்க்கைத்திறனை மேம்படுத்தக் கல்வியைப் பெறுதல் அவசியமாகும். அடுத்துப்பாடசாலையின் வளர்ச்சியில் பெரும் பங்காளிகளாக செயற்படுபவர்கள் பெற்றோர்களே! மாணவர்களின் கற்றல் வெற்றி என்பது சமூகத்தின் கூட்டுமுயற்சியாகும். அறிவும் சான்றாண்மையும் நிறைந்த பிள்ளைகளால் பெற்றோரும் அவர்களின் நுண்ணறிவுப் பயன்பாட்டால் உலகமும் பெருமையடைகிறது. எனவே பிள்ளையினுடைய சமூக மயமாக்கலில் பெரும் பங்காளிகளாக பெற்றோரும் பாடசாலைகளுமே விளங்குகின்றன என்பதில் சந்தேகம் இல்லை.

பிள்ளையின் சமூகமயப்படுத்தலில் இன்றியமையாத கூறு சமூகத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நல்ல பழக்கவழக்கங்கள், கலாசார விழுமியங்கள், மனிதப் பண்புகள் என்பவை ஆகும். இவை உரிய முறையில் பயிற்றுவிக்கப்பட்டு பிள்ளைகள் சமூகத்தோடு பொருந்தி வாழ வழி வகுப்பதாகும். இவ்வாறான தூய அறிவை பழக்கங்களை வாழ்வியல் விழுமியங்களைப் பெறத் தவறிய பிள்ளைகளே நடத்தை பிறழ்வுகளுக்கும் கலாசார சீரழிவுகளுக்கும் உட்பட்டு சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுகின்றனர். வளரும் பிள்ளைகளுக்கு நல்லறிவு, பழக்கவழக்கங்கள், சமூகவிழுமியங்கள், பெரியோருக்கு உதவுதல், அவர்களை மதித்தல் போன்ற பண்பாட்டம்சங்களை பெற்றோரும் ஆசிரியர்களும் மாணவர்களை வழிப்படுத்த வேண்டியது இன்றைய கட்டாய தேவையாகவுள்ளது.

பெற்றோர்கள் மாணவர்களின் உடல், உள ஆரோக்கிய நிலையினை மேன்மையடையச் செய்வதுடன அவர்களின் உள்ளத்தைப் பாதிக்காத செயல்களில் ஈடுபடுதலையும் அவர்களது உடைச் சுத்தம் பேணப்பட வேண்டும். பிள்ளையின் ஆரோக்கியத்தை வளப்படுத்தும் நோக்குடன் நல்ல போசாக்கான உணவுகளை வழங்க வேண்டும் பிள்ளைகள் சொல்வதைப் பொறுமையாக கேட்க வேண்டும். அத்துடன் அவர்களிடம் அவ்வப்போது ஏற்படுகின்ற வினாவிற்குப் பொருத்தமாக விடையளிக்கவும் வேண்டும். குறை காணல் பயமுறுத்தல், விருப்பம் போல் எங்கு வேண்டுமாலும் செல்ல விடுதல், மற்றைய பிள்ளைகளோடு ஒப்பிட்டு பேசுதல் போன்றவற்றைப் பெற்றோர்கள் தவிர்த்தல் வேண்டும்.

"பானை வனைதல் குயவனுக்குப் பல நாள் வேலை அதனை உடைக்கும் தடியடிகாரனுக்கு ஒரு நிமிட வேலை " எந்தக் குழந்தையும் மண்ணில் பிறக்கையில் நல்ல குழந்தைகள் தான் அவன் நல்லவனாவதும் தீயவனாவதும் அன்னை வளர்ப்பினிலே" என்பது எத்தனை பொருள் பொதிந்த கவியாகும். பிள்ளை வளர்ப்பானது சரியானதாக அமைந்து காணப்படுதல் வேண்டும் அவ்வாறில்லை யென்றால் அந்தப்பிள்ளை சமூக விரோதச் செயல்களில் ஈடுபடும் அதாவது பஞ்சை ஒரு நெசவாளி எவ்வாறு புடைவையாக மாற்றுகின்றானோ அதே போன்று பிள்ளையையும் சமூகத்திற்கு ஏற்புடையவனாக ஆக்குவது பெற்றோரின் கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுத்தம் பேணல், வாழும் சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருத்தல், பெற்றோரையும் பெரியோரையும் மதித்தல், மனதை ஒரு நிலைப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடுத்தல், இயற்கையை இரசித்தல், பேணுதல், நேரத்திற்கு நித்திரை செல்லுதல், அதிகாலையில் நித்திரை விட்டு எழுதல், உரிய வேளை காலைக்கடனை கழித்தல், காலை மாலை கடவுளை வணங்குதல், பெரியோருக்கு கீழ் படிதல், போன்ற நல்ல பழக்கவழக்கங்களைப் பெற்றோர் சிறுவயதிலிருந்தே கற்றுக்கொடுத்தல் வேண்டும் இதனையே " தொட்டிற் பழக்கம் சுடுகாடு வரைக்கும்" என்பதை உணர்த்து கின்றது. நல்ல பழக்கமுடைய வர்களாக வளரும் பொழுது அவர்கள் சுயநலமற்ற வர்களாகவும் உதவி செய்யும் மனப்பான்மை உள்ளவர் களாகவும் இருப்பார்.

பிள்ளைகளுக்கு ஓய்வும் பொழுது போக்கும் மிகவும் அவசியமாகும். நல்ல நூல்களைத் தெரிவு செய்து பயனுள்ள பொழுது போக்காக அமைய ஏற்பாடுகள் செய்து கொடுத்தல் வேண்டும் நல்ல நூல்கள் நல்ல நண்பன் போன்றது." வாசிப்பு பழக்கத்தை பிள்ளைகளிடம் ஏற்படுத்த வேண்டும்

பிள்ளைகளை விடுமுறை காலங்களில் வெளி இடங்களுக்கு அழைத்துச் சென்று பொழுதை பயனுள்ள வகையில் கழிக்க வேண்டும். ஒரு பிள்ளை தாயின் கருவறையிலிருந்தே கற்கத் தொடங்குகின்றது. முறைசார் கல்வியை தொடங்க முன்னர் வீட்டுச் சூழலிலேயே மொழியைக் கற்கத் தொடங்குகின்றது. ஆகவே ஆய்வூக்கம், காரண காரியத் தொடர்பு காணல், அறிவு விருத்தி ஆன்மீக விருத்தி போன்றவற்றைப் பெற்றோர் பிள்ளைகளிடத்தே வளர்த்தல் வேண்டும்.

**திருமதி விஜயராணி வரதீஸ்வரன்**
**ஆசிரியர்**
**யாழ்/வேலணை சைவப்பிரகாச வித்தியசாலை**

# நிலையில்லா காதல்

**வேலணையின் மகள்**
**திருமதி கஜரூபன் நிவேதிகா**

உன் உயிரானவளின்
உயிர்த் தேவனே....!
உயிரானவன் நீ தானென்று
உறுதி மொழி தந்ததால் தானே
உறக்கம் தொலைத்து
உன்னையே நினைத்து
உருகி இருந்தேன்
உன்னைத் தெரியவில்லை
உன்னை நினைவிலில்லையென
உண்மை மறந்து உரைப்பது
உனக்கே தகுமா?

உயிர் மூச்சில் உன் பெயரெழுதி
உன்னையே துணையாய் எண்ணி
உலகம் மறந்தவளை உதறித் தள்ளி விடுதல்
உத்தம செயலா...?

உள்ளமென்பது ஆண்களுக்கு
உறுதியாய் இருப்பதில்லையென
உற்ற நண்பி கூறிய போது
உதாசினப் படுத்திய நான்
உள்ளத்தை உன்னிடத்தில்
இழந்தேன் - இப்போது
உன் வார்த்தை கேட்டு
உணர்விழந்து போய்
உயிரையே வெறுக்கிறேன்

உயிரானவனே இறுதியாய்
உன் உள்ளத்தில் எழுதி வை-என்
உயிர் உன்னை சேராவிடில்
உடல் மண்ணை சேருமென்று

நிலையில்லா காதலால்
நிலை குலைந்து போய்
நிலை கெட்ட மனிதமாய்
நாதியற்று நடமாடுகின்றேன்
நடுவீதியிலே........!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீ வரும் நேரம்

இனி உன்னை
நான் சந்தித்துக்கொள்வது
பனித்துளிகள் உலரா புலர் அதிகாலைப்
பொழுதொன்றாக இருக்கலாம்.

அல்லது மேகம் மூடி இருள் சூழும்
மழைக்காலத்தின் ஓர் குளிர் நேரமாகலாம்...
உச்சி உருகும் கடும் வெய்யில் நேரம்
ஒற்றைத் தென்னையின் நிழலில்
நாம் கூடலாம்

வேப்பம் பூ உதிரும் வசந்த காலத்தின்
இளம் மாலை நேரத்து
மம்மல் பொழுதாகவும் அது
அமைந்து விட வாய்ப்புண்டு
இல்லையென்றால்


இரவின்வாசலில் கவிதை எழுதுகின்ற
அந்திப்பொழுதின் ஆரம்பத்தில்
நீ என் அருகிருக்கலாம்.
அது நிலவிறங்கி வருகின்ற
முன்பனி நேரத்து முதலாம்
ஜாமமாக இருப்பதற்கும் சந்தர்ப்பம் உண்டு.

கனவுகளில் களைத்து கண்ணயர்ந்து போகின்ற
அரை ஜாம நேரத்திலோ அன்றி
முதல் சேவல் கூவுகின்ற
முன் காலை பொழுதிலோ
உன் குளிர் விரலால் மெய் தீண்டவும் நேரலாம்

இல்லை இதை நான் எழுதுகிற
இந்த நேரத்தில் நீ வந்தால் உன் அழகை
தமிழில் நான் எழுத வேண்டியிருக்கும்
கொஞ்சம் காத்திருப்பாய் அல்லவா. -----

**வேலணையூர்-தாஸ்,**

# உன்னால் முடியும்



உன்னால் முடியும்
உனக்கும் ஒரு நாள் விடியும்
எழுந்திடு மனிதா
எழுதிடு வரலாறு

காலையில் பனித்துளி
கடமையில் வியர்வைத்துளி
உண்மையே பேசி உயர்ந்திடு – இதை
உலகிற்கு உணர்த்திடு

நம்பிக்கை வைத்தால்
தும்பிக்கையானும் துணை நிற்பான்
எழுந்து நில் எதிர்த்து நில்
புறப்படு புதுயுகம் படைக்க

சோம்பல் கொண்டு
மெத்தையிலே படுத்துறங்கி
சிந்தனையில் எதுவுமின்றி
பல காலம் வாழ்வதை விட
வாழ்த்துவது ஒரு முறை
வாழ்த்தட்டும் தலை முறை

சிறகை விரித்து சிகரம் தொடு
விண்ணில் பறந்து விண் மீன் தேடு
காலம் உன்பெயர் சொல்லட்டும்
காவியத்தில் உன் பெயர் பொறி

-அ. கிரிசா-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அம்மாவுக்கு என எழுதி அனுப்பாத கடிதம்

ஆக்கம்: த.கேமயாழினி

அன்புள்ள அம்மா!
கடிதங்களிலாவது கனதியாய் இருந்த அன்பு
தொலைபேசியோடு தொலைந்து போனது
லண்டன் நகரில் இருந்து கொண்டு
ஹலோ என்று நானழைக்க – பதிலுக்கு
ஹலோ என்று நீ அழைக்கும் - முன்
உடனே தொடரும் உனது கேள்வி
சொன்னபடி காசனுப்பச் சுணங்கியது ஏன்
நான் சொன்ன பதிலை மனதில் கொள்ளாது
சுடுகின்றாய் வார்த்தைகளால்
அக்காவின் திருமணத்திற்கு பட்ட கடன் - அத்தோடு
புதுவீடு கட்ட இடையிலே பெற்ற கடன்
இத்தனைக்கும் நான் உழைத்து எண்ணுகையில்
வீட்டை அலங்காரப் படுத்த வேண்டியது தானா!
தொலைக்காட்சிப் பெட்டி, குளிர்சாதனப் பெட்டி
இன்னும் என்னென்னவோ தேவைதானா?

அம்மா!
தொலைபேசி என்றாலே பணம் கேட்டுத்
தொந்தரவு தருகின்ற தொல்லை பேசி ஆக்குகின்றாய்
எப்படி இருக்கின்றாய் தம்பி லண்டன் நகரில் இரவு பகல்
பாராது இரண்டு நேரம் வேலை செய்கின்றாயா?
இவ்வாறெல்லாம் இனி வேண்டாம் மகனே – என்று
ஓர் வார்த்தை உன் வாயில் இருந்து உதிர்ந்தாலே போதும் - அது
எந்தக் குளிரிலும் எப்படியும் வேலை செய்ய
தென்பை எனக்கு நிச்சயமாய்த் தந்திருக்கும்
மற்றவர்கள் படுவேகமாய் முன்னேறுவதை
எப்போதும் எடுத்துரைக்கும் நீ – நான்
முப்பதைத் தாண்டியதை ஏன் மறந்தாய்
ஏழு நாட்களுக்குமாய் ஒரு நாளில்
நான் சமைத்து குளிர்சாதனப் பெட்டியினுள்
வைத்து பின் அதை சூடேற்றி சூடேற்றி
உண்பதை நீ அறிவாயா?

அம்மா!

நிலாச் சோறூட்டி நீ வளர்த்தாய்
வெயில் மழை தீண்டாது
நீ பார்த்தாய் பள்ளிக்கூடத்தால்
நான் வரவும் பாதி வழி நீ வந்து நிற்பாய்
அந்த அம்மாவா நீ
உழைத்தெதுவும் தரவேண்டாம் உயிர் காத்தாலே போதும்
என்று தானே என்னை ஏஜென்சியுடன் அனுப்பி வைத்தாய்
இன்று உழை உழை என்று ஓட ஓட விரட்டுகிறாய்
அம்மாவின் அன்புக்காய் ஏங்கியது போய்
அம்மாவின் அழைப்பு என்றாலே அஞ்சுகிறேன் - இதைவிட
நான் அங்கேயே நின்றிருக்கலாம் என அங்கலாய்க்கிறேன்.

இப்படிக்கு
அன்பு மகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகுதி

செல்வி செல்லத்துரை றசினி

சாம்பவிக்கு ஏனோ அந்த நிசப்த வேளையிலும் தூக்கம் வரவில்லை. நாளைய தினத்தை எதிர்பார்த்து அவள் மனம் அலை பாய்ந்தபடி இருந்தது. சாம்பவி தற்போது நடுத்தர வகுப்புப் பெண் ஆடம்பர வாழ்வென்று சொல்லுமளவுக்கு அவள் அவ்வளவு வசதி படைத்தவள் அல்ல. உறவென்று சொல்வதற்கு தாயைத்தவிர வேறு யாருமில்லை.

முன்னொரு காலத்தில் பொன்தட்டில் உண்டு மாடமாளிகை வீட்டில் வசதியாக வாழ்ந்தவள் தான் சாம்பவி. பணத்துக்கு குறைவில்லை. அவளுடைய அப்பா பல நிறுவனங்களுக்கு சொந்தக்காரர். அவர் எங்கு செல்வது என்றாலும் ஒவ்வொரு வண்டிகளும் பல வேலையாளர்களும் இருந்தார்கள். சாம்பவி வீட்டில் செல்லமாக எந்தக் குறையுமில்லாமல் வளர்ந்தவள்.

அவள் எது கேட்டாலும் தந்தை இல்லை என்று மறுத்ததில்லை. இவ்வாறான நேரத்தில் தான் திடீரென ஏற்பட்ட வியாபார நட்டம் காரணமாக அவள் தந்தை அனைத்து சொத்துக் களையும் இழந்து சாதாரண ஒரு வீட்டில் குடிபுகுந்தார். அதன் வலி ஏனோ மனதில் தாக்கவே ஓரிரு மாதங்களில் அவர் மாரடைப்பால் இறந்து போனார். தந்தை இறந்தது அக் குடும்பத்திற்கு பெரிய இழப் பாகவே இருந்தது.

ஆரம்பத்தில் சாம்பவிக்கு ஒருநாள் வாழ்வதென்பது ஒரு யுகமாகவே இருந்தது. மிகவும் மனமுடைந்து போனாள் சாம்பவி. இவ்வாறான ஒரு நிலையை அவள் கனவிலும் எதிர்பார்க்கவில்லை. கலங்கி நின்ற தாய்க்கா கவும் வீட்டு சுமையினை ஓரளவாவது குறைக்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்துக் காகவும் அவள் வேலை தேடி புறப்பட்டாள். கடும் போட்டியின் மத்தியில் கம்பனி ஒன்றில் வேலை கிடைத்தது. அவ் சம்பாத்தியத்தில் உண்பதற்கு உணவும் வீட்டு வாடகையும் கட்டுவதற்கு அது போதுமானதாக இருந்தது.

அவள் வேலை பார்த்த நிறுவனத்தை இன்று யாரோ விலைக்கு வாங்கி விட்டார்கள். நாளை புது முதலாளி வரப்போகின்றார் என்று அறிவித்திருந்தார்கள். நாளை வரும் புது முதலாளி எப்படி இருப்பாரோ அவர் மனதில் நல்ல பெயரொன்றை எடுத்துவிட வேண்டும் என்ற மன உறுதியுடன் காலையில் நேரத்துடன் எழுந்து சீக்கிரமாக அலுவலகம் போய்விட வேண்டுமென்று எண்ணியபடி கண் அயர்ந்தாள்.

அதிகாலை விடிந்ததும் நேரத்துடன் எழுந்து வேலைகளை முடித்துவிட்டு அலுவலகம் புறப்பட்டாள். அன்று அவளைப் போலவே எல்லோரும் நேரத்துக்கே வந்திருந் தார்கள். புது முதலாளியைப்பார்க்க வேண்டு மென்று அவள் மனமோ பரபரப்பாக அடித்துக் கொண்டிருந்தது. இதோ புது முதலாளி வந்து விட்டார் என்றான் காவலாளி. அலுவல கத்திற்கு முன் கார் ஒன்று வந்து நின்றது. அதில் வயதான ஒருவரை எதிர்பார்த்து நின்ற சாம்பவிக்கு அங்கு எளிமையாக அடக்கமாக இறங்கிய இளைஞனைப் பார்த்ததும் அவள் மனதில் திக்கென்றது. ஆடாது அசையாமல் வந்தவரையே கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அலுவலக உதவியாளர் ஒவ்வொரு வருடைய பெயரையும் கூறி அவர்களை அறிமுகப்படுத்திக்கொண்டு சாம்பவி அருகே வந்தார். இவர் பெயர் சாம்பவி குணசீலன் என்று பெயரினை அறிமுகப்படுத்தினார் உதவியாளர். வந்த நிறுவன உரிமையாளர் வணக்கம் சாம்பவி குணசீலன் என்று புன்முறுவல் பூத்தபடியே அவளை ஒருதரம் நோக்கிவிட்டு அவள் பதில் சொல்வதற்குள் எதுவும் நடவாதவர் போல் அலுவலகத்துக்குள் சென்று உட்கார்ந்தார்.

அங்கு நின்றவர்கள் இவர் பெயரும் குணசீலன் தான் உங்களுக்குத் தெரியுமா? என்று கேட்டுவிட்டு அவரவர் வேலை இருப்பிடங் களுக்கு நகர்ந்தார்கள். அவளுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. இருந்த வேலையும் போகப்போகிறது. இந்த வேலை எடுக்கப்பட்ட பாடு அவளுக்கு மட்டும் தான் தெரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனிவரும் பிரச்சனைகளை நான் எப்படி சமாளிக்கப் போகின்றேன்.

நான் அவனுக்கு செய்த துரோகத்திற்கு அவன் என்னைத்தான் மன்னிப்பானா? அல்லது வேலையில் இருந்தே என்னை நீக்கி விடுவானா? என அவள் மனம் பலவற்றை யோசிக்க ஆரம்பித்தது. எங்களிடம் பணமிருந்த காலத்தில் அவனை அவதூறாக பேசியதும் அவனது ஏழ்மையை குத்திக்காட்டியதெல்லாம் இப்போது நன்றாகவே ஞாபகம் வந்தது. அவனை விட்டுப் போகும் தருவாயில் கூட என்னை விட்டு போகாதே சாம்பவி என்று அவன் கெஞ்சியதும் என்னுடைய பணத்திமிரால் அவனை தூக்கி எறிந்து விட்டு வந்ததும் நான் உனக்கு என்ன சாம்பவி குறை வைத்தேன் என்று அவன் கேட்டதற்கு எல்லாமே குறைதான் வைத்தீர்கள் என்று உதறிவிட்டு வந்ததும் அவளுக்கு நன்றாகவே ஞாபகம் வந்தது.

அவன் முகத்தில் முழிக்கவே தயக்கமாக இருந்தது. இவ்வாறு யோசித்துக் கொண்டிருக்கையில் உதவியாளர் அம்மா உங்களை ஐயா உள்ளே அழைக்கின்றார் என்றான். கதவைத்திறந்து உள்ளே சென்றாள் சாம்பவி நலமாக இருக்கிறீர்களா சாம்பவி என்றான் குணசீலன். ஆம் இருக்கின்றேன் என்று பொங்கி வந்த கண்ணீர் துளிகளை அடக்கியபடி மெதுவாக கூறினாள்.

அதற்கு அவன் இந்த இரு வருடங்களில் இவ்வளவு கஷ்டப்பட்டிருக்கிறீர்கள் ஏன் எனக்கு சொல்லவில்லை உனக்கு உதவி செய்யக்கூட நான் தகுதியில்லாதவனா சாம்பவி என்று அடக்கமாக கேட்டான். அவன் இன்று வரை அவனாகவே இருக்கிறான் வசதி வந்தும் கூட அவனில் எந்த மாற்றமுமில்லை. எல்லோரிடமும் தகுதி பார்த்து பேசுபவனும் அல்ல என்று அவளுக்கு நன்றாகவே புரிந்தது. தான் அவனை விரும்பிய காலத்தில் அவனுக்கு அணிந்த சங்கிலியில் தன் பெயரை பதித்து அணிந்தமையும் அது இன்று வரை அவன் கழுத்தில் இருப்பதையும் அவள் கவனிக்கத் தவறவில்லை. வார்த்தை எதுவும் பேசாதவளாக தன்னுடைய கையொப்பத்தை உறுதிப்படுத்தி விட்டு தன் ஆசனம் சென்று அமர்ந்தாள்.

சாம்பவி சென்றபின் அவள் வைத்த கையொப்பத்தில் சாம்பவி குணசீலன் என்று இருந்ததை அவன் கவனிக்கத் தவறவில்லை இன்று வரை தன் பெயரை இனிசலாக வைத்திருப்பது. இன்றும் அவள் மனதில் தான் உள்ளேனே என்றே நினைக்கத் தோன்றியது. அவன் மனதில் பழைய நினைவுகள் மீண்டும் மலரத் தொடங்கியது.

சாம்பவியும் குணசீலனும் சிறுவயதிலிருந்தே ஒன்றாகப் படித்தவர்கள். சாம்பவி என்றால் அவ்வளவு பிரியம் குண சீலனுக்கு அவளுக்கு ஒரு பிரச்சனை என்றால் முன் நிற்பவன் குணசீலனே. சாம்பவி பெரிய வளானதும் அது காதலாக மலர்ந்தது. இரு வீட்டார்களும் திருமணத்திற்கு சம்மதம் என்றே தெரிவித்தார்கள். பெருவிமர்சையாக திரு மணமும் இடம்பெற்றது.

அவன் அவளைப் பூவைப் போலவே பாதுகாத்து வந்தான். எந்நிலை வந்தாலும் உன்னைப் பிரியாமல் நெஞ்சுக்குள் வைத்துப் பார்ப்பேன் என்று சத்தியமும் செய்து கொடுத்தான். ஆறு மாதங்கள் நன்றாகக் கழிந்தது சாம்பவியில் பல மாற்றங்கள் தெரிய ஆரம் பித்தன. அவள் வசதியுடன் வாழ்ந்தவள் என்பதால் இந்த வாழ்க்கையை அறவே வெறுத்தாள். ஆடம்பரப் பொருட்களிலே நாட்டமும் கொண்டாள். ஆடம்பரப் பொருட் களையே பெரிதும் விரும்பிக் கொண்டாள். அவள் கேட்ட பொருட்களுக்கு அவன் சம்பாத்தியம் போதுமானதாக இல்லை.

சாம்பவி இருப்பதை வைத்தே வாழ வேண்டும் தகுதிக்கும் மீறி ஆசைப்படக்கூடாது என்று பலமுறை கூறியிருப்பான் அதற்கு அவள் அப்போ நீங்கள் மட்டும் ஏன் உங்கள் தகுதியை மீறி என்னில் ஆசைப்பட்டீர்கள் என்று கூறிவிட்டாள். இந்த வார்த்தைகள் அவனை துளைக்கவே மனமுடைந்து போனான் குணசீலன். அதன் பிறகும் அவளுடைய ஆசை அடங்கியதாக தெரியவில்லை.

உங்களுக்கு வாங்கித்தர வசதியில்லை என்றால் என்னை விட்டு விடுங்கள் என்று தன் தந்தை வீட்டை நோக்கி நிரந்தரமாகவே சென்று விட்டாள். போகும் தருவாயில் கூட என்னை விட்டுப் போகாதே சாம்பவி என்று பல தடவை கையை பிடித்து கெஞ்சியிருப்பான். அவள் மனம் இரங்கியதாக இல்லை. நாட்கள் கழிந்தன அவனில்லாத வாழ்வு வெறுமையாகவே இருந்தது.

அவள் கூறிச்சென்ற வார்த்தைகள் மனதைக் குடைந்த படியே இருந்தது. அவள் முன் எப்படியாவது முன்னேறிக் காட்டவேண்டும் என்ற வெறி மாத்திரமே மனதுக்குள் இருந்தது.அவள் நினைப்பை மனதின் ஓரத்தில் வைத்தவிட்டு வேறு இடம் சென்று இரவு பகலாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைத்து அதன் பலனாக பல நிறுவனங்களை விலைக்கும் வாங்கினான் பலவற்றிற்கு அவனே முதலாளியும் ஆனான். மீண்டும் இரண்டு வருடங்கள் கழித்து ஊருக்கு வந்ததும் சாம்பவி வீட்டில் யாரோ குடியிருந்தார்கள். விசாரித்த போது அவள் தந்தை இறந்து விட்டதாகவும் அவளும் தாயும் வேறு பிரதேசத்தில் வாழ்ந்து வருவதாகவும் அவள் கம்பனி ஒன்றில் வேலை செய்வதாகவும் தகவல் கிடைத்தது. அவளைப் பார்க்க வேண்டும் என்ற எண்ணத்தில் அந்த நிறுவனத்தை அவனே விலைக்கு வாங்கினான். இப்போது அவளை சந்தித்தும் விட்டான் அவர் தன் மனைவி என்பதை அவன் ஒரு நாள் கூட மறந்ததில்லை. இவ்வாறு சிந்தனையில் இருந்து மீண்டான் குணசீலன்.

சாம்பவி அலுவலகம் முடியும் நேரம் வந்தது அவசரமாக வெளியே புறப்பட்டாள். கால் நடையாக வீட்டை நோக்கி சென்று கொண்டிருந்தாள். குணசீலனும் தன் காரை எடுத்துக் கொண்டு அவளருகே நிறுத்தி ஏறுங்கள் சாம்பவி நான் இறக்கிவிடுகின்றேன் என்றான். அதற்கு அவள் பரவாயில்லை இது எனக்கு இப்போது நன்றாக பழக்கப்பட்டு விட்டது என்று நடக்க ஆரம்பித்தாள். அதற்குள் அவன் அவள் கையைப்பிடித்து சாம்பவி உனக்கு செய்த சத்தியத்தை நான் மறக்கவில்லை இப்போதும் உன்னைத்தான் நினைத்தபடி வாழ்ந்து கொண்டிருக்கிறேன் நீ கேட்ட அனைத்தும் என்னிடம் இப்போது உள்ளது என்னிடம் வந்துவிடு சாம்பவி என்று தாழ்மையாக கேட்டான்.

இதை அவன் கேட்பான் என்று எதிர்பார்க்கவில்லை. சாம்பவி அவன் கேட்டதை எத்தனையோ முறை அவனிடம் கேட்பதற்கு எத்தனித்திருக்கின்றாள். அவள் தந்தை இறந்தும் அவனைத் தேடி அவள் அலைந்தும் அவனிடம் எப்படியாவது மன்னிப்பு கேட்கவேண்டும் அவனுடன் சேர்ந்து வாழவேண்டும் என்று பல முறை நினைத்திருக்கின்றாள். அவன் தன்னை ஏற்க மாட்டான் என்ற எண்ணத்தில் அம் முயற்சியை கைவிட்டும் விட்டாள்.

பல தடவை அவனை நினைத்து அழுதும் இருப்பாள். இப்போது அவன் வந்து இவ்வாறு கேட்டதும் சம்மதம் என்ற துடித்த மனதிற்கு கடிவாளம் போட்டது அவள் கண்ணீர் தான். என்னை மன்னித்து விடுங்கள் பணம் வாழ்க்கையில்லை என்பதை நான் நன்றாக புரிந்துவிட்டேன். இருப்பதைக் கொண்டே வாழ்வது சந்தோசம் இந்த இரண்டு வருடங்களில் அதற்கான பாடத்தை படித்து விட்டேன் என்று கண்ணீர் மல்க அவனின் நெஞ்சில் சாய்ந்தாள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பாடும், பாரம்பரியமும்

பண்பாடு என்பது சமூகத்தின் வாழ்க்கை முறையாகும். ஆதி காலம் தொடங்கி இன்று வரை மாற்றம் ஒன்றே மாறாதது என்பதற்கிணங்க எமது பண்பாடும் வரலாற்று ரீதியாக மாற்றங்களை உள்வாங்கி வந்துள்ளது. காலணித்துவம் காரணமாக எமது பண்பாடுகள் சிதைக்கப்பட்டுப் புதிய பண்பாட்டுச் சூழலுக்கு எம்மை ஆளாக்கியுள்ளதுடன் எந்திரத் தனமான, தனித்தியங்கும், தங்கி வாழ்வோர் என்ற நிலைக்கு எம்மை ஆளாக்கியுள்ளது. எமது மண் சார்ந்த பண்பாடு, பாரம்பரியம், பழக்கவழக்கங்கள் என்பது நாகரீகமற்றது, பழையது, தரங்குறைந்தது என எண்ணும் நிலைக்கு எம்மை நாமே உருவாக்கி எமது அழிவுக்கு நாமே வழி கோலுபவர்களாகக் காணப்படுகின்றோம்.

காலணித்துவம் அதனால் கட்ட விழ்க்கப்பட்ட நவீனத்துவம் என்பதும் எமது சமூக பாரம்பரியத்தை, பண்பாட்டை உடைத்து சமூக மாற்றத்தை, பண்பாட்டு மாற்றத்தை உருவாக்கியுள்ள சூழலில் நவீன மயப்பாட்டின் வேக அளவுக்கு பாரம்பரியப் பேணுகைக்கான உந்துதல்களை ஏற்படுத்துவது அவசிய மானதாகும். இருப்பினும் பண்பாட்டை நவீன மயமாக்குவதில் ஆழமும், அகலமும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய சூழலில் மக்கள் அரச தொழில் வாய்ப்பு, தனியார் நிறுவனங் களில் வேலை வாய்ப்பு, வியாபாரம், வெளி நாட்டு வேலை வாய்ப்பு போன்றவற்றில் ஆர்வம் காட்டுகின்றனர். இக் காலத்தில் கிராமப் புறங்களில் இருந்து நகரை நோக்கிய மக்களின் நகர்வும் குறிப்பிடத்தக்கது.

எமது பண்பாட்டு அம்சங்களில் ஒன்றான பாரம்பரியமான தொழில் முயற்சிகளில் பெரும் தொகைப் பணத்தைச் செலவிட்டு அதன் மூலம் கிடைக்கும் வருமானத்திற்காக பல மாதங்கள் காத்திருக்கும் நிலைக்கு மாறாக எதுவித முதலீடும் இன்றி தங்களின் வாழ்வியல் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய நிலையுள்ளதையும், கௌரவம், அந்தஸ்து என்பன புதிய சூழலில் கிடைப் பதையும் மக்கள் உணர்கின்றனர். பாரம்பரிய தொழில் முயற்சியை பிழைப்பூதிய தொழிலாக அன்றி தமது வருவாயைப் பெருக்கிக் கொள்வதற்காக மேற்கொள்ளும் பல தொழில் முயற்சிகளில் ஒன்றாகக் கொள்ளும் நிலையும் இக் காலத்தில் ஏற்படுகின்றது. இத்தகைய சூழலில் ஏதோ ஒரு அரசியல் நோக்கத்திற்காக எம்மை அழிக்க நினைக்கும் சக்திகளுக்கு நாம் கரம் கொடுப்பவர்களாக, கரம் கொடுப்பதாக எமது பண்பாடு மாற்றப்பட்டுள்ளது. எமது பண்டைய சமூகம் பண்பாட்டின் மையமாகக் கொள்ளப் பட்டாலும் அச் சமூகமும் சாதியம், பெண் அடக்கு முறை போன்ற செயற் பாடுகளைக் கொண்டிருந்தது என்பது குறிப் பிடத்தக்கது.

புராண இதிகாசக் கதைகள் எல்லாம் ஏதோ ஒரு வகையில் சமூகத்தில் குறிப்பிட்ட கடப்பாடுகளை வகுப்பதாக கட்டமைக்கப் பட்டுக் காணப்படுகின்றது. சமயமும் கால காலமாக கலாச்சாரம், பண்பாடு என கட்டுப்பாடுகளையே விதித்து வந்துள்ளது. பண்பாடு பற்றி நூகோ எனும் அறிஞர் குறிப்பிடுகையில் கலாச்சாரம் என்பது விதித்துக் கொள்ளும் கட்டுப்பாடு என்கிறார். தற்போதைய சூழலில் பழைய புராண இதிகாசக் கதைகள் கட்டுடைத்து கட்டவிழ்க்கப்படும் போது தான் சமூகத்தில் புகுத்தி வைக்கப்பட்டுள்ளவை மெய்பிக்கப் பட்டு வந்த தவறான சிந்தனையைப் புரிந்து கொள்ள முடிகின்றது.

இன்று எமது மண் சார்ந்த எமது மூதாதையர் பின்பற்றிய பண்பாட்டை கதையாகவும், கல்வியாகவும், காட்சிப் பொருளாகவும் பார்க்கும் நிலைக்கு நாம் மாற்றப்பட்டுள்ளோம் என்பதைத் தாண்டி இவற்றின் தேவை என்ன? பண்பாட்டின் வேர்களுக்கு திரும்புங்கள் என கோசம் எழுப்பப்படும் தற்போதைய சூழலில் இது எவ்வளவு சாத்தியமாகும்? உடனடியாக சாத்தியமாக்கலாமா? என்ற வினாக்கள் எம்முன் எழுகின்றது. இருப்பினும் எமது பண்பாடு, எமது பாரம்பரியம் என்ற பெருமிதப் பேச்சுக்களைத் தாண்டி மண் சார்ந்த பண்பாடு பற்றி சிந்திப்பது எம்மை எமது அழிவில் இருந்து பாதுகாக்க நாம் எடுக்கும் முயற்சி என்றால் ஐயமில்லை.

**ஆக்கம்:செல்வி. மைதிலி ஜெயதாசன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org